www.tamilarangam.net

வாழ்வு என்பது மனிதனின் மதிப்பற்கரிய செல்வம். ஒரு மனிதன் ஒரு முறைதான் வாழமுடியும் என்பதால், அந்த வாழ்க்கையை சில்லறைத்தனமான, பயனற்ற, கோழைத்தனமான முறையில வாழ்ந்தோமே என்ற ஏக்கம் மனதை வாட்டி வதைக்காத வகையில் மனிதன் வாழவேண்டும் வாழ்வின் இறுதியில திரும்பிப் பார்க்கையில் என்னுடைய வாழ்நாள் முழுவதையும், பலம் - திறம் அனைத்தையும், மிகவும் உன்னதமான மிகவும் மகத்தான இலட்சியத்தை அடைவதற்கு, மனிதகுலத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்தேன் என்று பெருமிதத்துடன் கூறும்வகையில் வாழ வேண்டும்.

# எமது போராட்டப்பாதையின் திசை விலகல்களும் வெளிநாடுவாழ் ஈழத்தமிழரின் பங்களிப்பும்.

**மக்களே,**
**மக்கள் மட்டுமே**
**வரலாற்றை உருவாக்கும்**
**உந்துசக்தியாவர்!**

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி
National Liberation Front of ThamilEealam

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது விடுதலைப் போராட்டம் அவமாக ஒரு வல்லரசு அரசியல் சிக்கலில் மாட்டிக் கொண்டதற்கு இந்தியாவை மட்டுமே பொறுப்பாளியாக்க வேண்டும். தமிழ்நாட்டிலும் வேறு இந்திய மாநிலங்களிலும் மக்கள் மட்டத்தில் நமது நியாயமான போராட்டத்திற்கு இருக்கும் ஆதரவை இந்திய அரசின் பிராந்திய வல்லாதிக்க வெறியைத் தான் பார்த்தது, குறிப்பாக '83 யூலைக்குப்பின் பல இயக்கங்கள் இந்திய அரசிடம் படிப்படியாக சரணடைந்தன. இந்தச் சரணடைவு அரசுக்கு ஒரு தற்காலிக பலத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது. அவர்களின் அரசியல் பார்வையை மழுங்கடித்தது.

தென் இந்திய பிரதேசத்தையும் அப்பகுதி மக்களையும் நம் போராட்டத்திற்கு பயன்படுத்துவது ஒரு விடயம் – இந்திய அரசிடம் அடிமையாக தெரிந்தோ தெரியாமலோ அடிபணிதல் இன்னொரு விடயம்.

துரதிஷ்டவசமாக இதுவே நடந்துவிட்டது. இதுவே இராணுவமாகவும் பெரும்பலமாகவும் தமிழ் ஈழத்து மக்களின் உண்மையான பங்கு சரியாக இருக்கப்படாமல் போகவும் அவர்களின் விடுதலைக்கு வெளியிலிருந்து சக்திகளிலும் நமது இயக்கங்களின் நேர்த்திச் செயல்களிலும் நம்பிக்கை வைப்பதற்கும் உதவியுள்ளது. ஆகவே, நமது பக்கத்திலிருக்கும் தவறுகளை நாம் உணர்தல் அவசியம்.

சில இயக்கங்களும் சில வக்கற்ற குழுத்தலைவர்களும் நம்பியிருந்த "இந்தியத்தாய்" இன்று தன் இராட்சத ராணுவக் கொடுக்கைக் காட்டும்போது, அவர்களது பாசிசவாதங்கள், கண்மூடித்தனங்கள் எல்லாமே அம்பலமாகின்றன. இவற்றின் விளைவுகள் நமது விடுதலையின் பின்னடைவே. இதனால்தான் இந்த அனுபவத்தின் பாடம் முக்கியத்துவம் பெறுகிறது.

நமது மக்களின் ஸ்தாபனமயமாக்கப்பட்ட பலத்திலும் மக்கள் யுத்தத்தை நோக்கிக் கொண்ட ஆயுதப் போராட்ட நடைமுறையிலும் தங்கியிருந்து, தமிழ்நாட்டு மக்களோடும், மற்றைய இந்திய மக்களோடும், இந்தியாவிலுள்ள ஜனநாயக அமைப்புகள், தொழிலாளர் இயக்கங்கள், மற்றும் ஒடுக்கப்பட்ட சக்திகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றிலுள்ளும் உறவுடன் நாம் இயங்கவேண்டும். இந்த அடிப்படையில் மற்றைய சர்வதேச அமைப்புகளின் ஆதரவையும் பெற்று நாம் போராடும்போது இந்திய (பிராந்திய) வல்லரசுக்கும் நமக்குமிடையிலான உறவை தன்மையில் தீர்மானிக்கச் செய்யும். இந்தியாவுக்குள்ளே மக்களின் ஆதரவையும், நமது சுதந்திரமான போராட்ட சக்தியையும் மீறி இந்திய (பிராந்திய) வல்லரசு நமது போராட்டத்தை நசுக்குவது சுலபமானதல்ல.

## தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் —
i) எதேச்சாதிகார வன்முறையும்
ii) வெளிநாட்டிலுள்ள தேசப்பற்றுள்ளவர்களின் கடமையும்

---

'அரசியல் வேண்டாம், Action தான் வேண்டும்'
'எங்கட இனம் இப்படித்தான்'
'எல்லாமே சேர்ந்து அடித்தால் நல்ல விஷயம்'
'எங்களுக்கு புத்தகம் வாசிக்க நேரமில்லை' என்று கூறி, தங்களையே தாங்கள் திருப்திப்படுத்தும் எம்மக்களில் ஒரு பகுதியினருக்கு ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களை முன்னிட்டு, தயவாக சில கருத்துக்களை முன்வைக்கின்றோம்.

இன்று எங்கள் இயக்கங்கள் எம்மீது திணிக்கப்படும் அடக்குமுறைக்கு எதிர்ப்புக் காட்டுகின்றார்கள்.
- அங்குமிங்குமாக அரசயந்திரம் தாக்கப்படுகின்றது.
- பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படுகின்றன.
- இராணுவ கவசவண்டிகள் தாக்குதலுக்குள்ளாகின்றன.
- அரசநிர்வாகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இவற்றிற்கு மேலாக, சில உணர்வான இளைஞர்கள் சுத்த இராணுவ கண்ணோட்டத்திலிருந்து விலகி, அரசியல் தெளிவுடன் மக்களுடன் இணைந்து ஆயுதப்போராட்டம் நடாத்த முனைகின்றார்கள்.

இவை போராட்டத்தின் ஒரு பகுதி, மற்றைய பக்கத்தில்
- பலர் புழுக்குயாருக்கும் 'அகதி'களாக வெளியேறுகின்றார்கள்.
- அங்கங்கே தந்திக்கம்பங்களில் உடல்கள் தொங்குகின்றன.
- பல வீரர்கள் கடத்தல் வாகனங்களிலும், சுசுக்கி மோட்டார் சைக்கிளிலும் — மக்கள் மந்தைகளெனவும் தாங்கள் மேய்ப்பவர்களும் என்பதுமான தோரணையில் ஆயுதங்களுடன் பவனி வருகின்றார்கள்.

மக்களுக்கு விடுதலை பெற்றுத்தர தியாகம் செய்யப் புறப்பட்ட 'பொடியன்களைக்' கண்டு, பீதியுடன் நோக்கும் நிலைக்கு மக்கள் மெதுமெதுவாக தள்ளப்படுகின்றனர்.

www.tamilarangam.net


இயக்கங்கள் ஒன்றையொன்று அழித்தும், இயக்கங்களிலிருந்து
வெளியேறுபவர்கள் கடத்தப்படுவதும் ஒழிக்கப்படுவதும், இயக்கங்களினுள்ளே
சித்திரவதைகளும், கொலைகளும் அடிக்கடி நடக்கின்றன.

இவ்வாறான, அநியாயமான உயிர் இழப்புக்கள் நிறுத்தப்படுவதும்,
இயக்கங்களை சரியானவழியிற் செயற்பட வைப்பதும்,
( தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இன்றியமையாததால் )
உணர்வுள்ள எல்லா தமிழ்பேசும் மக்களின் கடமையாகும்.

மக்களை வழிநடத்த வெளிப்புறப்பட்டவர்களை, மக்கள் வழிநடத்தவேண்டிய
துர்ப்பாக்கிய நிலைமை என்ன என்பது?

எதேச்சாதிகார வன்முறையின் தொடக்கம்.
கடந்த 30 வருடங்களாக, ஓரளவு வசதிபடைத்தவர்களை பிரதானப்படுத்தி,
மக்களின் நலன்கள் இன அடிப்படையில் பாதிக்கப்பட்டபோது,
பாராளுமன்ற அரசியல்மூலம் கேட்டுப்பெறலாம் என தமிழ்த்தலைமைகள்
சொல்லிவந்தன.
ஆனாலும், காலப்போக்கில் அந்த ஒரு பகுதிமக்களின் நலன்களைக்கூட
பிரதிபலிக்க முடியாதவர்களாகிய பாராளுமன்ற நாற்காலிகளில் மோகம்
கொண்டதைக் கண்டோம்.

ஒரு அரசியல் சமூகத்தின் சக்திபற்றிய எதுவித பிரக்ஞைகூட இல்லாமல்,
பாராளுமன்றம் போவதையே நோக்காகக் கொண்டு மேடைமேடையாக
அடுக்குவசனம் பேசினர்.
- அடுத்த தேர்தல் தமிழீழத்தில்
- திருகோணமலையைத் தலைநகராக்குவோம்
எனப் பிதற்றித் திரிந்தனர். 77ம் ஆண்டு தேர்தல், தமிழீழத்திற்கான
வாக்கெடுப்பு என்ற இவர்களின் — வேட்பாளர் தெரிவிற்கான இழுபறி-
களும் ஆதரவாளர்களின் உண்ணாவிரதங்களும் — பாராளுமன்ற
மோகத்தை தேர்தல் முடியமுன்னரே வெளிப்படுத்தின.

மேலும், தாங்கள் சலுகைகளைப் பெறுவதற்காக ஆளும்கட்சிகளுடன்
மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் உறவுகள் வைத்திருந்த
அதேநேரம், சில தனிப்பட்ட நபர்கள் சுயநலன்களிற்காக

www.tamilarangam.net


ஆளும் கட்சியின் வால்பிடிகளானபோது, அவர்களை அம்பலப்படுத்தி அரசியலிலிருந்து தனிமைப்படுத்த லாயக்கில்லாத இவர்கள் வால்பிடிகளை ஒழித்துக்கட்ட (உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்களும்) மறைமுக ஆதரவு நல்கினர். இதன்மூலம் எதேச்சாதிகார வன்முறைக்கு அடித்தளமிட்டனர்.

## இயக்கங்களின் தோற்றம்.

வீரப்பிரதாபங்களிலும் வெறுங்கோஷங்களிலும் பின்னணியிலிருந்த கபடத்தனங்களை இனம்கண்டு கொண்ட இளைஞரை, அடுக்குமொழி அண்ணன் இராசதுரையின் குத்துக்கரணமும், இன்றைய ஒடுக்குமுறையின் பிரதிநிதி கே. துரை, ஆசியாவின் மிகச்சிறந்த ஜனநாயகவாதி எனப் பெருமைப்பட்ட தளபதி அமிர்தலிங்கத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேச்சும், மற்றும் நடைமுறைகளும் விழிப்படைய வைத்தன.

ஆனாலும், இவ்விழிப்பு வெறுமனே தமிழ்த்தலைமைகளின் அரசியல் நாடகத்தின் மீதான வெறுப்பாகத்தானிருந்தது. இவ்விழிப்பு சமூக பிரக்ஞையிலிருந்தோ அல்லது அடிப்படைகள் பற்றிய தெளிவிலிருந்தோ உருவாகாமல் சூழல் தடுத்திருந்தது:

- சிங்கள பேரினவாதத்தின் பிடியில் சரணாகதியடைந்திருந்த பாராளுமன்ற இடதுசாரிகளின் செயலும்,
- வறட்டுத்தனமான கோஷங்களை முன்வைத்த புரட்சிவாத நடைமுறையும்,
- தமிழ்பேசும் மக்களை இப்படியான தலைமையின்கீழ் அணிதிரள விட்டிருந்த சூழ்நிலையும் தடுத்தன.

இவ்வாறு தலைமையில் ஏற்பட்ட வெறுப்பு இளைஞர்களின் ஆயுத நடவடிக்கை-யாக பரிணமித்தபோது,

- மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களினால் ஏமாற்றப்பட்ட மக்கள்,
- தொடர்ச்சியாக தமிழ்த்தேசிய இனத்தின் வளர்ச்சியை தடைசெய்யும் பாணியிலான நடவடிக்கைகளைக் கண்ட மக்கள்,
- ஒடுக்குமுறைக்கு எதிராக அணிதிரட்டப்படாது, வெறுமனே வாக்குப்போடுவதற்காகத்தான் மக்கள் என வளர்க்கப்பட்டிருந்த மக்கள்
- தனிநபர்கள் பற்றிய அதீத நம்பிக்கையுடனிருந்த மக்கள்
- வழக்கை பொறுப்புக் கொடுப்பது போல, அரசியலையும் யாராவது

www.tamilarangam.net



பிறரிடம் ஒப்புக் கொடுக்கும் மனநிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் தலைவர்கள் செய்வார்கள் என்ற நிலையிலிருந்து, "பொடியன்கள்" செய்வார்கள் என்ற (மீண்டும் பொறுப்புக் கொடுக்கும்) நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இயக்கங்களின் ஆரம்பகாலம்.

இவ்வாறான பொறுப்புக் கொடுக்கும் மனநிலையிலுள்ள மக்களின் சூழல்

- அரசியல் வறுமை
- ஸ்தாபனரீதியிலான அணிதிரட்டலுக்கான உணர்வு அற்றநிலையில் இளைஞர்கள் மக்களின் மேலோட்டமான உணர்வுகளை மையப்படுத்திய நடவடிக்கைகளிலிறங்க அவர்களை உந்தியது.

மேலும், சில இளைஞர்கள் ஆயுதமேந்தி எதிரியைத் தாக்குவதுதான் விடுதலைப் போராட்டம் எனும் பிரக்ஞை ஏற்படுத்தப்பட்டதால், தனிப்பட்ட பிரச்சனை மற்றும் இன்னோரன்ன காரணிகளை வைத்து, ஏதும் இராணுவத்தாக்குதல், மற்றும் கொள்ளைகள் செய்பவரெல்லாம் இயக்கம் எனப் பிரகடனப்படுத்தக்கூடியதாக அமைந்தது.

அரசியற் கருத்துக்களிலும், மக்களின் மத்தியில் வேலை செய்வது என்பதிலிருந்து விடுதலை இயக்கங்களின் அறிமுகம் உருவாகாமல்,

- அங்க அடிச்சது நாங்கள்தான்
- 'எங்களின் தலைவர் இன்னார்' என்று சொல்லியே இயக்கங்கள் அறிமுகமாயின.

செயற்கை வீக்கம்:

இவ்வாறு, தவறானமுறையில் இயக்கங்கள் தோன்றியவேளையில், ஒடுக்குமுறை பலகோணங்களிலும் அதிகரிக்க, பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள், மேற்கூறிய உந்துதல்களின் அடிப்படையில் அணிஅணியாக இயக்கங்களிற் சேர்ந்தனர்.

- இயக்கங்கள் தம்மை திருத்த கால அவகாசம் இல்லாமற் போனது
- சில அந்நிய உதவிகள் கிடைத்தது

இவை காரணமாக இயக்கங்கள் 'செயற்கை வீக்கம்' பெற்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கங்களின் தவறான போக்கு

போராட்டத்தில் முன்னோடிகளாயிருந்தவர் பெரும்பாலும் மத்தியதரவர்க்க இளைஞர்கள்.

ஆயுத அமைப்பில் உந்தப்பட்ட இளைஞர்கள் பலரும்

- பல்வேறு சக்திகளை நிராகரித்தோம்
- நண்பர்கள் வெளிநாடு செல்ல நாம் போராட வந்தோம் என்கின்ற உணர்வுகள்
- தமது அர்ப்பணங்கள் பற்றிய அதீத உணர்வு
- அதற்கான பிரதிபலனை உடனே காணவேண்டும் என்கின்ற வேட்கை
- முடியுமான எல்லாத் தந்திரோபாயங்களையும் உபயோகிக்க தயங்கக்கூடாது என்கின்ற வேட்கை

என குறுகிய காலக் கண்ணோட்டம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

இவர்களிடம் நீண்டகால கண்ணோட்டத்தை வளர்க்க, பெரும்பாலான இயக்கங்களால் முடியவில்லை. ஏனெனில் அவர்களும் இதே பலவீனங்களின் கைதிகளே.

இங்குதான்

ஆயுதமேற்றிய மமதையும்
இந்தச் சனங்களுக்கு சொல்லி விளங்காது என்ற எண்ணமும்
அந்நிய உதவியில் அதீத நம்பிக்கையும்
ஸ்தாபன அமைப்பு முறைகளைப் பொறுத்து எதேச்சாதிகார வன்முறையும் வெளிப்பட ஆரம்பித்தன.

மேலும், சில தனிநபர்கள் (தமிழ்மக்களின் இன்றைய போராட்டகாலத்தைக் கணக்கிலெடுக்காது) சுயவிருப்புத்தீர்வடிப்படையில் செயற்படும்போது

- அவர்களை மக்களிலிருந்து அந்நியப்படுத்தலை பிரதானமாகக் கொள்ளாது-
- தனிநபர்கள் உருவாகிறதற்கான அடித்தளத்தை இனங்காண மறுத்து

தனிநபர்களை ஒழித்துக்கட்ட முற்படுகின்றனர்.

உதாரணமாக, மக்களின் மன உணர்வுகளை புண்படுத்தும்வண்ணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா இராணுவத்திற்கும் மாணவர்களுக்கிடையே உதைபந்தாட்டத்தை ஒழுங்குபண்ணிய போது

- மாணவர்களை, பகிஷ்கரிப்பு செய்ய உந்தியிருக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- இதற்கெதிராக எதிர்ப்பு தெரிவிக்க பெற்றோர்களை (மக்களை) அணிதிரட்டியிருக்கலாம்.

மக்களை அரசியல்மயப்படுத்துவதற்கு முடியவில்லையெனில் அது எமது பலவீனம். எங்கள் அரசியல் பலவீனங்களை முதலில் களைவோம்.

இதிலிருந்து அதிபரை ஒழித்துக்கட்டுவதன்மூலம்,

- அவ்வாறான தனிநபர்கள் தோன்றுவதை எவ்வாறு தடுக்கலாம்.
- சுடுவார்கள் எனத் தெரிந்திருந்தும், செயல்கள் தொடர்கின்றனவெனின் சுடுவது மாத்திரம் எப்படித் தீர்வாக முடியும்?
- சில தனிநபர்கள் தோன்றுவதற்கான அடிப்படைகள் உடைக்கப்படாதவரைக்கும், எதிர்காலத்திலும் இவ்வாறானவர்கள் தோன்றுவதை எவ்வாறு தடுக்கலாம்.

இதற்கு மேலாக, அரசியல்ரீதியான விமர்சனத்திலிருந்து; அதிபர் இராணுவத்திலிருந்து இரகசியங்களைப் (இயக்கங்களிற்கு) பெற்றுத்தர முனைந்திருக்கலாம் என எழுதுமளவிற்கு சில இயக்கங்களின் (அரசியல் வறுமை) நடைமுறை இருக்கின்றது.

இயக்கங்களின் ஆரம்பம், நடைமுறை எல்லாம் எமக்கு உணர்த்துவது

- ஆயுதம் மட்டும் விடுதலையைத் தந்துவிடாது -

சமூக, பொருளாதார உறவுமுறைகளை கவனத்திற் கொண்ட சரியான வேலைத்திட்டத்தினதும், ஸ்தாபன அமைப்பினதும் முக்கியத்துவத்தையே. மேலும், மக்களை அரசியல் மயப்படுத்தலின் அதிமுக்கியத்துவத்தையே.

மௌன பங்களிப்பு.

- எங்கட பொடியன்கள் செய்வான்கள் என்ற ஈழம்வாழ் மக்களின் கண்மூடித்தனமான நம்பிக்கையும்
- இயக்கங்களின் கொள்கை, செயற்திட்டம், நடைமுறை என்பனபற்றி ஆய்ந்தறியாது, வெளிநாடுவாழ் தமிழ்மக்கள் அளித்த உதவிகளும்

இந்த அழிவிற்கான காரணிகளே.

இனிமேலும் ஏனோதானோ என்றிராது,

இதுவரை என்னென்ன செய்யப்பட்டது?

இதனாலான பலாபலன்கள் என்ன?

இந்த நடைமுறை மக்களை எவ்வாறு பாதித்துள்ளது?

மக்களின் மனோவியல்புகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது?

-மனிதாம்சம் இழக்கப்படும் (Dehumanaisation) வாழ்வின் ஜீவமரணப் போராட்ட அடிப்படை (Survival instinct) மாத்திரமே உந்துசக்தியாக இருக்குமெனின், அதனூடாக சென்றடையும் முடிவில் -

மக்களை அணிதிரட்டும் அரசியல் பலமின்றி எமது பலவீனங்களின் கைதிகளாகிவிடுவதா?.

உலக வரலாற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து, மற்றைய நாடுகளின் புரட்சிகர அனுபவங்களிலிருந்து எமது போராட்டம் சரியானதுதானா?, எவ்வாறு செயற்படவேண்டும்? என சிந்திப்போம்.

இவ்வாறன, கேள்விகளை எங்களை நாங்களே கேட்டு, பொறுப்பு மிக்கவர்களாக நாங்கள் செயற்பட்டாலே -

இயக்கங்களின் ஏதேச்சாதிகார போக்கினை நிறுத்தவும்
சுபிட்சகரமான எதிர்காலத்தை உருவாக்கவும் முடியும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்களாகிய நாம், ஸ்ரீலங்கா இராணுவத்தின் அட்டூழியத்திலிருந்து நன்கே விலகி இருப்பதனால்

- ஈழம்வாழ் மக்களின் பிரச்சனைகளை ஏனோதானோ என்று பொறுப்பற்று இருந்துவிடாது
- வெளிநாடுகளில் நிரந்தரநிம்மதி கிடைத்துவிடும் என்றிராது

உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் ஈழம்வாழ் தமிழ்மக்களின் பிரச்சனையை உணர்வுபூர்வமாக அணுகவேண்டும்.

இது மனிதாபிமானமுள்ள அனைவரதும் கடமையாகும்.

www.tamilarangam.net


முடியுமானவரை அனைத்து மக்களிடமும், ஈழத்தில் நடைபெறும் இன அழித்தொழிப்பையும், இராணுவ அடக்குமுறைகளையும் முன்கொணர்வோம்.

— மக்கள் மீதான ஒடுக்குமுறையை அம்பலப்படுத்துவோம் —

இயக்கங்கள் மத்தியிலான கொள்கைப்பிளவுகளும், சில இயக்கங்களின் அடாவடித்தனங்களும் விடுதலையைப் பின்னடைய வைக்கும் என்பதனால், இயக்கங்களின் சரியான வளர்ச்சிக்கு உதவுவதும், பிழையான போக்குகளை கண்டிப்பதும் எமது கடமையாகும்.

— மக்களே, மக்கள் மட்டுமே சகாப்தங்களை உருவாக்குபவர்.
— இயக்கங்களை இனம் காணுவோம், சரியானபாதைக்கு இட்டுச் செல்வோம்.
— பூரண சுதந்திரமுள்ள ஈழத்தைக் கட்டியமைப்போம்.

விடுதலைப் போராட்டமானது, வெறுமனே இராணுவ வெற்றியல்ல, சமூக, பொருளாதார உறவுமுறை மாற்றம் பற்றியது. முதலில் இராணுவ வெற்றி, தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி, பின்னர் சமூக உறவுமுறை என அர்த்தமின்றி பிரித்துப்பார்ப்போமாயின், சிலவேளை சில அகபுற காரணிகளால் பிரிக்கப்பட்டாலும் பின்னர் மக்கள் நலனை தீர்மானிக்கும் தன்மை இழந்தநிலைக்கு தள்ளப்படுவோம்.

நாம் இந்த தொடர்ச்சியான போராட்டத்தில் (Continuous process) சரியான முறையில் எம்மை இணைத்துக் கொள்வதன் மூலமே, எமது மனஉணர்வுகளையும் சிந்தனையையும் உண்மையான விடுதலையை நோக்கி நகர்த்தலாம்.

எவ்வளவு நிபுணத்துவம் மிக்கவர்களானாலும் நாம் உதிரியாக இருக்கும்வரை
— தற்காலிக தனிப்பட்ட நலன்களை பூர்த்தி செய்தாலும் —
மக்களின் விடுதலைக்கு உதவப் போவதில்லை.

மக்கள் விடுதலை பெறும்வரைக்கும் எமது தலைவிதியை நிர்ணயிக்க முடியாதநிலையிலேயே நாம் வாழ நேரிடும்.

— சிறுதுளி பெருவெள்ளம் —
— உணர்வுபூர்வமாக பங்களிப்போம் —
— கடமையை நிறைவேற்ற, சிந்தனைகளைக் கூர்மையாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நடைமுறை மக்களை எவ்வாறு பாதித்துள்ளது?
மக்களின் மனோவியல்புகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது?

-மனிதாம்சம் இழக்கப்படல் (Dehumanaisation) வாழ்வின் ஜீவமரணப் போராட்ட அடிப்படை (Survival instinct) மாத்திரமே உந்துசக்தியாக இருக்குமெனின், அதனூடாக தன்னிறைவடையும் முடிவில் -
மக்களை அணிதிரட்டும் அரசியல் பலமின்றி எமது பலவீனங்களின் கைதிகளாகிவிடுவதா?

உலக வரலாற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து, மற்றைய நாடுகளின் புரட்சிகளும் அனுபவங்களிலிருந்து எமது போராட்டம் சரியானதுதானா?, எவ்வாறு செயற்படவேண்டும்? என சிந்திப்போம்.

இவ்வாறான கேள்விகளை எங்களை நாங்களே கேட்டு, பொறுப்பு மிக்கவர்களாக நாங்கள் செயற்பட்டாலே -
இயக்கங்களின் எதேச்சாதிகார போக்கினை நிறுத்தியும் சுபிட்சகரமான எதிர்காலத்தை உருவாக்கவும் முடியும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களாகிய நாம், ஸ்ரீலங்கா இராணுவத்தின் அட்டூழியத்திலிருந்து நன்கே விலகி இருப்பதால்
- ஈழம் வாழ் மக்களின் பிரச்சனைகளை ஏதோதானே என்று பொறுப்பற்று இருந்துவிடாது
- வெளிநாடுகளில் நிரந்தர நிம்மதி கிடைத்துவிடும் என்றிராது உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் ஈழம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சனையை உணர்வுபூர்வமாக அணுகவேண்டும்.

இது மனிதாபிமானமுள்ள அனைவரதும் கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முடியுமானவரை அனைத்து மக்களிடமும் ஈழத்தில் நடைபெறும் இன அழித்தொழிப்பையும், இராணுவ அட்டூழியங்களையும் முன்கொணர்வோம்.

— மக்கள் மீதான ஒடுக்குமுறையை அம்பலப்படுத்துவோம் —

இயக்கங்கள் மத்தியிலான கொள்கைப்பிளவுகளும், சில இயக்கங்களின் அடாவடித்தனங்களும் விடுதலையைப் பின்னடைய வைக்கும் என்பதனால், இயக்கங்களின் சரியான வளர்ச்சிக்கு உதவுவதும், பிழையான போக்குகளை கண்டிப்பதும் எமது கடமையாகும்.

— மக்களே, மக்கள் மட்டுமே சகாப்தங்களை உருவாக்குபவர்.
— இயக்கங்களை இனம் காணுவோம், சரியானபாதைக்கு இட்டுச் செல்வோம்.
— பூரண சுதந்திரமுள்ள ஈழத்தைக் கட்டியமைப்போம்.

விடுதலைப் போராட்டமானது, வெறுமனே இராணுவ வெற்றியல்ல, சமூக, பொருளாதார உறவுமுறை மாற்றம் பற்றியது.
முதலில் இராணுவ வெற்றி, தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி, பின்னர் சமூக உறவுமுறை என அர்த்தமின்றி பிரித்துப்பார்ப்போமாயின், சிலவேளை சில அகபுற காரணிகளால் பிரிக்கப்பட்டாலும் பின்னர் மக்கள் நலனை தீர்மானிக்கும் தன்மை இழந்தநிலைக்கு தள்ளப்படுவோம்.

நாம் இந்த தொடர்ச்சியான போராட்டத்தில் (Continious process) சரியான முறையில் எம்மை இணைத்துக் கொள்வதன்மூலமே, எமது மனஉணர்வுகளையும் சிந்தனையையும் உண்மையான விடுதலையை நோக்கி நகர்த்தலாம்.

எவ்வளவு நிபுணத்துவம் மிக்கவர்களானாலும் நாம் உதிரியாக இருக்கும்வரை — தற்காலிக தனிப்பட்ட நலன்களை பூர்த்தி செய்தாலும் — மக்களின் விடுதலைக்கு உதவப் போவதில்லை.

மக்கள் விடுதலை பெறும்வரைக்கும் எமது தலைவிதியை நிர்ணயிக்க முடியாதநிலையிலேயே நாம் வாழ நேரிடும்.

— சிறுதுளி பெருவெள்ளம் —
— உணர்வுபூர்வமாக பங்களிப்போம் —
— கடமையை நிறைவேற்ற, சிந்தனைகளைக் கூர்மையாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குறுகிய அரசியற் கண்ணோட்டம் காரணமாக, தமிழ்பேசும் மக்கள் இன்று எதிர்காலம்பற்றிய நிச்சயமில்லாதநிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
ஒருபுறம், கிழக்குமாகாணத்திலிருந்து தமிழரை அகற்றும்பணியில் அரசபயங்கரவாதத்தின் வேகம்
- மக்களை பாதுகாப்பதற்கான அடிப்படை இராணுவதந்திரோபாய மின்றி தாக்குதற்கட்டத்திலுள் பாய்ந்ததன் விளைவு
மறுபுறம், தனது பிராந்திய நலனிற்கேற்றவகையில் ஒரு "சமரசத்தீர்வை" திணிக்க, இந்தியா முயல்கின்றது.
- இவற்றை எதிர்த்து மக்களை திரட்டி, நீண்டகால போராட்டத்தை முன்னெடுக்கும் தகமை பல இயக்கங்களிற்கு இல்லை என்பதனை மக்கள் புரியத் தொடங்குகின்றனர்.
இவற்றைவிட இன்னொருபுறம்,
இயக்கங்களிடையேயான எதேச்சாதிகார வன்முறை அரசியல் பல இயக்கங்களை அவற்றின் வளர்ச்சியை இறுதி உயர்கட்டத்திற்கு கொண்டு வந்தது.
அது, வன்முறைபோக்கு நீடிக்கும்வரை, அவர்களால் இதற்குமேல் வளரமுடியாது.

இந்நிலையில் நாம் என்ன செய்வது?
நமக்கு எதிராக இருக்கும் சூழ்நிலையை, எமக்கு சாதகமாக எவ்வாறு திருப்புவது என்பது எல்லா இயக்கத்தின் மத்தியிலும் (உண்மையிலேயே மக்களில் அக்கறையுள்ளவர்களாயின்) சாதாரணமாக எழவேண்டியகேள்வி.

நாம் மக்களை இனியும் பார்வையாளராக வைத்திருக்கமுடியாது என்பதை பலரும் இன்று புரிகின்றார்கள். ஆனால், எவ்வாறு அவர்களை போராட்டத்தில் பங்குபற்ற வைப்பது என்பதுபற்றி ஆழமானபார்வை பலரிடம் இல்லை.

(1) கிராமமட்டத்தில் உணவுஉற்பத்தி, பங்கீடு என்பவற்றை நடைமுறைப்படுத்தக்கூடியவகையில் ஸ்தாபனரீதியாக மக்களை அணுகவேண்டும். அது கூட்டுறவுரீதியாகவோ, வேறுவிதமாகவோ அமையலாம்.

www.tamilarangam.net


(2) சிவில் நிர்வாகம் சீர்கெட்டிருக்கும் நிலையில், சமூக விரோத சக்திகளிடமிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ளும் முறையிலான கண்காணிப்புக் குழுக்கள் மக்களினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(அவற்றிற்கு இயக்கங்கள் உறுதுணையாக இருக்கலாமேயொழிய தாமே முடிவுகள் எடுக்கும் எதேச்சாதிகாரமாக மாறக்கூடாது)
இதன்மூலம் மக்கள் சமூகவிரோதிகளை அந்நியப்படுத்தி, இனம்கண்டு கொள்ளவும் பின்னர் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கவும் உதவும்.

இவ்வாறான நடவடிக்கைகளினூடாகவே அரசியல்மயப்படுத்தல், மக்களைப் பங்குபற்ற வைத்தல் என்பவற்றை அர்த்தப்படுத்த முடியும். இதனூடாகவே கிராமப்புறங்களில், பாதுகாப்பு ஸ்தாபனங்களில்லா குழுவாக, நாளடைவில் மக்களை ஆயுதபாணியாக்க முடியும்.

உடனடியாக இவற்றை மேற்கொள்வது தற்காலிகமான இன்றைய சூழலிற்கு மாத்திரமல்ல, தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவும், பின்னர் மக்கள் விடுதலையைத் தொடரவும் அத்தியாவசியமானது.

மேற்கூறியவற்றை அமுல்படுத்துவதற்கு ஆரம்பத்தில் பல்வேறு பொருளாதார உதவிகள் தேவை.
இவ்வாறான உதவிகளை வெளிநாட்டிலுள்ள தேசபக்த சக்திகள் முன்னின்று நடாத்த வேண்டும்.

மேலும், இதனூடாக விடுதலை பெறும் எமது போராட்டத்தை நிலைநிறுத்தவும், கட்டி வளர்க்கவும் —
ஆரம்பத்தில், குறைவிருத்திப் பொருளாதாரத்தின் அடிப்படையை கணக்கிலெடுத்து, உற்பத்திசக்திகளின் வளர்ச்சியின் தேவைக்கான வழிமுறைகளை நாம் கைக்கொள்ள வேண்டும்.
மூன்றாம் உலகநாடுகளிலேயே மிகவும் அதிக விகிதாசார அடிப்படையில் நிபுணத்துவர்களையும், முகாமைத்துவர்களையும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் நாம் அவர்களின் திறமையை எமது எதிர்கால அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"சோசலிச தமிழ் ஈழம்" என கற்பனைவாத கோஷங்களை முன்வைப்பதனால் மட்டும் எமது நாட்டில் சோசலிசம் வரப்போவதில்லை. ஆனால், ஓர் அதிகாரத்துவ (Bureaucratic) அமைப்பே உருவாகலாம்.

நீண்டகாலத்தில் சோசலிசத்தைக் கட்டி வளர்க்கும் நோக்கில், உற்பத்தி சக்திகளை வளர்க்கும் வகையில் எமது அரசியல், பொருளாதார திட்டங்கள் அமைதல் வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு இயக்கங்கள்

- எமது சமூகம் பற்றி மேலோட்டமான கண்ணோட்டங்களைக் கொண்டு பார்ப்பதை விடுத்து, -

துல்லியமாக ஒவ்வோர் உறவுமுறையையும் உணர்ந்து சரியான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மறுபுறம், வெளிநாடுகளில் வாழும் சக்திகள் தாய்நாட்டில் இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஓர் ஒருங்கிணைந்த அமைப்பின்கீழ் தமது பல்வேறு ஆற்றல்களையும் பயன்படக்கூடிய வகையில் தமது சிந்தனையைத் திசை திருப்ப வேண்டும்.

பல்வேறு இயக்கங்களும் அங்குமிங்குமாக நமது தாய்நாட்டின் வளங்கள்பற்றி புள்ளிவிபரதரவுகள் (statistical data) வெளியிடுகின்றன. வளங்கள் இருப்பதுமட்டும் எமது பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்கப் போதுமானதல்ல.

- ஆபிரிக்காகண்டத்தில் வளங்கள் பெருமளவிலிருந்தும் ஏன் அந்நாடுகள் வறுமையில் வாழ்கின்றன என்பதை அவதானிக்க வேண்டும்.

எனவேதான், நாம் எமது மக்களின் எல்லாவித ஆற்றல்களையும் முழுமையான மக்களின் விடுதலையை (ஒரு சிறுபகுதியினதுவல்ல) நோக்கி நகர்த்தும் வகையில் மக்களின் உணர்வுகளை வளர்த்து, பங்குபற்றுதலை உறுதிப்படுத்தி செயற்படவேண்டும்.

ஒரு சிறுகுழுவோ, இளைஞர் கூட்டமோ மக்களின்மீது அதீத கற்பனைகளைத் திணிக்கமுடியாது.

www.tamilarangam.net



– நீண்டகாலத்தில் மக்களில் தங்கியிருக்கக்கூடிய

– பரந்துபட்ட மக்களின் நலனை பிரதிபலிக்கக்கூடிய ஸ்தாபனமானது மக்கள் மத்தியில் வேரூன்றியும் சரியான அரசியல் மார்க்கம் கொண்ட ஒன்றாகவே உருவாக முடியும்.

எமது போராட்ட வழிமுறைகளின் பலவீனங்கள் காரணமாக, எமது போராட்டம் தற்காலிகமாக சரணாகதியடையலாம்.

– இச்சரணாகதி தற்காலிகமானதே.

– பெருந்தேசிய இனவாதத்தில் இருப்பைக் கொண்ட சிங்கள அரசினால் தமிழ்மக்களின் அடிப்படைப்பிரச்சனையை தீர்க்கமுடியாது.

உலக வரலாற்றில் பின்னடைவுகள் மிகவும் குறுகியகாலகட்டமே.

## நமது தவறுகளை களைந்தெறிவோம்!

இங்கேயோ 'சுயசக்தியின்' அடிப்படையில் ஒரு அமைப்பு உருவானால்

– அதிகாரப்பங்கீட்டு போட்டியில் ஒருவரையொருவர் கழுத்தறுப்பது

– உணர்வுமிக்க கீழ்மட்ட உறுப்பினர்களின் (தலைமைக்கெதிரான) கடந்தகால கசப்பான அனுபவங்கள் துப்பாக்கிகளின் திசை திரும்பலாக (misfiring) – படுகொலைகளாக – அமைவது,

– குறுகிய வரட்டுத்தனமான, சுத்த இராணுவக்கண்ணோட்டத்தை நடைமுறைப்படுத்துவது,

— தடுத்து நிறுத்தி

அனைத்து இயக்கங்களும் மனசுத்தியுடன் தமது தவறான பாதைகளை

— நிராகரிக்க

சகலரும் எமது பங்களிப்பைச் செலுத்துவோம்.

www.tamilarangam.net



இன்றைய எதேச்சாதிகார வன்முறை எமது போராட்டப்பாதையில்
அங்கும் இங்கும் தோன்றும் சில நடைமுறைத் தவறுகளல்ல.

அது அப்பாதையையே திசைமாற்றி நடாத்த அதிகாரத்திற்குள்
நம்மைத் தாக்கும் தவறான மார்க்கமே.
— அது நமது சமூக அடிப்படையின் வெளிப்பாடே!

இவற்றை சில தவிர்க்கமுடியாத தவறுகள் என நினைத்து
— அசட்டை செய்யாதீர்!

அரசியலில் நாம் சிறிய இனம்தான்.
ஆனால், நம்மக்கள் விடுதலையை வேண்டி நிற்கின்றார்கள்.
ஆயுதப் போராட்டமே அதற்கேற்ற என உணர்கின்றார்கள்.
மக்களின் ஸ்தாபனமயமாக்கப்பட்ட பலத்துடன் ஒன்றிணைந்து,
சரியான தலைமையின்கீழ் போராடுதல்,
தற்காலிக தடைகளை தகர்த்தெறிந்து, நிச்சயம்,
வெற்றி நோக்கி நகர்வோம்!

நமது விடுதலைப் போராட்டத்தின் "ஆத்மாவை" வேறொரு
சக்தியிடம் விட்டுவிட்டு, நாம் போராட முடியாது.

பிரமைகளைக் களைந்து,
மக்கள் ஜனநாயக தமிழீழத்தை மலரவைக்க,
உங்கள் பங்களிப்புகளை நல்குவீர்!

தற்காலிக பின்னடைவுகளைக் கண்டு மனம் தளராதீர்!

மனச்சோர்வும், விரக்தியும் நமக்கு சுதந்திரத்தை தரப்போவதில்லை.
தமிழ் இனத்தை திட்டமிட்டு, நாம் ஒதுங்குவதற்கான சுலபமான
வழிகளை விடுத்து,

நமது மக்களின் விடுதலைபற்றி —
அறிவுபூர்வமாக சிந்திப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூட்டானின் இறைச்சிக்கடை

சுத்திச் சுத்திச்
சுழன்றும் உழன்றும்
தொலைவில்
நூறு துண்டாய்த் தெறித்தும்
மறுபடி
ஒன்று சேர்ந்து
வந்து சேர்ந்தாயிற்று -

'சுப்பற்றை கொல்லை'

வட்டமாய் மேசை,
சதுரமாய்க் கதிரை.
சுற்றியோ
பழைய தோசையாய்ப் புளித்த
உழுத்தந் தலைகள்
ஆட்டலாம் அவற்றை -
உண்ணலாம், குடிக்கலாம்
எவற்றையும்.

விட்டத்தில் தொங்குது
தராசு.

எதனைப் போட்டு நிறுக்கலாம்?

□□

வீதியெங்கும் சிதறிய குருதியை
சாம்பலாய்க் கரியாய்
எஞ்சியிருக்கும் வீடுகளை
கடைசி நிமிடத் துளியில்
சொந்த மண்ணை எட்டவுமின்றித்
தொலைவில்
அவலமாய் எழுந்த குரல்களை
நாய்களால்
குதறப்பட்ட எமது பெண்களை -

மறுபுறம்,
அவர்களின் நிலத்தில்
'எமது வீரத்'தில்
தொலைந்த உயிர்களை.

எங்கோ தொலைவில்
இருந்தபடியே
எமது சரித்திரம்
எழுதுவோம் என்றார்.

கால்களை நீட்டிக்
கைகளைக் குவித்துக்
குப்புறக் கிடப்பதும்
சரித்திரம் ஆனது.

சரணடைக!

சடலங்கள் மீது
சாம்பலைத் தூவியே
சரித்திரம் படைத்து
வயிறுகள் வளர்த்த
வீரபரம்பரை

– சுகுமார் –

**சுகுமாரின்
ஒரு
கவிதை**

தோழரே
துப்பாக்கியை உயர்த்தும்
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக
நடுவில் உள்ள
கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டேந்தான்
பாரும்.
எதிரிதானே அது?
வலது ஆள்காட்டி விரலைப் பின்னோக்கி இழும்
சரியாகக் குறிபார்த்தால்
ஒரேகுண்டே போதும் தோழரே.

சமயத்தில்
எதிரி கிடைக்கா விட்டால்
ஊரில் மனிதர்களும்,
மின்சாரக் கம்பங்களும் உண்டு.

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனை..........

துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.
நியாயப் படுத்த தலைமைப் பீடமும்,
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே

விடுதலைப் பாதையில்
வீறு நடை போடுவே

இத்துண்டுப்பிரசுரம், தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் (NLFT), U.K. ஆதரவாளர்களால் வெளியிடப்பட்டது.

தொடர்புகட்கு:

NLFT
BM BOX 7204
LONDON
WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்